மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP) ஈரோடு மாவட்ட அலுவலகம்

பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம்

நல்லூர் ஊராட்சி

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம், நல்லூர் ஊராட்சி மற்றும் நல்லூர் கிராமம், ரீ.ச.எண் : 338/2B-ல் அமையும் குடியிருப்பு மனை உட்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டமில்லா பகுதி)



அளவு : 1:400 (1செ.மீ = 4.0மீ)

இணையதள விண்ணப்ப எண் : SFOYCZVF / 2025 நாள் : 26-11-2025

N

குறிப்பு :

மனை உட்பிரிவின் மொத்தப்பரப்பு : 0.25 ஏக்கர் (அ) 1012.00 சதுர மீட்டர்

ஒதுக்கிய மனைகள் : 04

மனை உட்பிரிவின் எல்லை.....

நிலையிலுள்ள சாலை .....

பொது ஒதுக்கீடு :

பூங்கா ஒதுக்கீடு பரப்பு : (மனை உட்பிரிவின் பரப்பு- மனை உட்பிரிவின் உள்ளே அமையும் மூலை முடக்கு பரப்பு) x 10%

: (1012.00 - 1.12 = 1010.88) x 10% = 101.08 சதுர மீட்டர்

: 101.08 சதுர மீட்டர் (10.0%) பூங்கா பரப்பிற்கு ஈடான அரசு வழிகாட்டி மதிப்பு தொகை செலுத்தப்பட்டுள்ளது)

தாள ஆவண எண் 81/2026, நாள்.06.01.2026-ன் படி உள்ளாட்சிக்கு தாளமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கட்டிட வரம்பு-

9.0மீ வரை அகலம் கொண்ட சாலைகளுக்கு 1.5 மீ விடப்படல் வேண்டும்.
9.0மீக்கு மேல் 18.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0 மீ விடப்படல் வேண்டும்.

மூலைமுடக்கு-

7.2மீ முதல் 12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ x 1.5மீ விடப்படல் வேண்டும்.

நிபந்தனைகள் :

1. அரசாணை எண்-18 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்-04.02.2019, அரசாணை எண்-16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்-31.01.2020 படி தாளமாக பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. அரசாணை எண்-181 வீட்டுவசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள்.09.12.2020-ல் தெரிவித்துள்ளவாறு சாலை வசதி மழைநீர் வடிகால் வசதி மேல்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் (ம) தெருவிளக்கு வசதி மற்றும் இதர வசதிகள் ஆகியவை உள்ளாட்சியின் விருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
3. அரசாணை எண்-141 வீட்டுவசதி (ம) நகர்புற வளர்ச்சித்துறை நாள். 16.07.2022 -ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
4. இம்மனை உட்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்படியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்பட வில்லை என்றும், வட்டார வளர்ச்சி அலுவலர்/ பவானிசாகர் ஊராட்சி ஒன்றியம் அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரிபார்ளவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்குள்ளான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகலினை மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. நகர் ஊரமைப்புத்துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் கிரையப்பத்திரம்குத்தகை பத்திரம், பட்டா, தாளப்பத்திரம், பொது அதிகாரப்பத்திரம் மேலும் பல விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று சரிபார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த ஒரு நபரும் விண்ணப்தாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளவும். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
8. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனை உட்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம் விடுதலின்றி மனைப்பரிவு நுழைவாயிலில் 6' x 4' அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
9. பிரஸ்தாப மனை உட்பிரிவிற்கு இவ்வலுவலகத்தால் தொழில்நுட்ப ஒப்புதல் மட்டுமே வழங்கப்படுகிறது. மனுதாரரின் நில உரிமத்தினை உறுதி செய்த பின்னரே உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
10. பிரஸ்தாப மனை உட்பிரிவு அமையும் இடம் குறித்து நீதிமன்ற வழக்கு எதுவும் நிலுவையில் இருப்பின் இவ்வுத்தரவு செல்லத்தக்கதல்ல.
11. மனை உட்பிரிவின் ஊடே குறைந்த அழுத்த மற்றும் உயர் அழுத்த மின்கம்பிபாதை ஏதேனும் செல்லுமாயின் அதனை சாலையில் போக்கிற்கு ஏற்றவாறு மனுதாரர் தனது சொந்த செலவில் மாற்றி அமைக்கப்பட்ட பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
12. மனை உட்பிரிவிளை ஒட்டி நீர் நிலைகள் இருப்பின் புல வரைபடம்/நிலையில் உள்ளவாறு நிலை நிறுத்தப்பட வேண்டும். இதனை உள்ளாட்சியால் கண்காணிக்கப்பட வேண்டும்.
13. மனையிடத்தினை சுற்றி சுற்றுசுவர் (COMPOUND WALL) அமைக்கப்பட்டிருப்பின் அதனை அகற்றி அருகிலிருக்கும் இடத்திற்கு இணைப்புபாதை அமையும் வகையில் சுற்றுசுவர் இடித்து அப்புறப்படுத்தப்பட வேண்டும்.
14. மனை உட்பிரிவின் ஊடே மின்சார அறைக்கட்டிடம் உள்ளது. அதனை இடித்த பின்னரே நகராட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
15. மனை உட்பிரிவு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் பெற்ற பின்பு RERA அனுமதி பெற்று பத்திரபதிவு செய்யப்பட்ட வேண்டும்.

APPROVAL NO. : SWP / DTCP / ERD / LAYOUT NO : 25 / 2026

அளவர் / உதவி வரைவாளர்	தேபுவனேஸ்வரி
வரைவாளர் நிலை -III	செ.சிவசங்கர்
கட்டிடகலை / திட்ட உதவியாளர்	சி.அரங்கராசு

Signature valid
Signed by: Assistant Director
Location:Erode
Date:2026.01.22 12:07:39

Signature valid
Signed by: Village Panchayat President
Location:Erode
Date:2026.03.05 21:08:57

நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர் (பொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.